1

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

***********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**முறையீட்டு மனு எண்.238/2018/பே**
**ஆணை நாள்: 19–09–2019.**

*****

திரு M. கனகராஜன்,
சமூக ஆர்வலர்,
26–பி கடலூர் மெயின் ரோடு,
புவனகிரி,
கடலூர் மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். — எதிர் மனுதாரர்.

ஆணை.

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, எண்.26–பி, கடலூர் மெயின்ரோடு பகுதியினைச் சேர்ந்த திரு.எம்.கனகராஜன் என்பவரது 13.08.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முமைன்ற நடுவத்தில் 19.08.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.238/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு .எம்.கனகராஜன், தனது முறையீட்டு மனுவில், கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி முன்னாள் தலைவர் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது கீழ்க்கண்ட புகார்களைத் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:–

(1) புயல் சேதத்திற்கென வரபெற்ற ஒதுக்கீட்டினை கையாடல் செய்தது ;
(2) பேரூராட்சியில் IUDM திட்டத்தில் 2012–ஆம் ஆண்டில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளது ;
(3) பேரூராட்சிப் பகுதில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் சரியான அளவுகளில் இல்லாமலும் மக்கள் உபயோகம் இல்லாத இடத்திலும் செய்யப்பட்டுள்ளது ;
(4) பேரூராட்சியில் பணிபுரியும் தினக்கூலி பணியாளரை தனது காருக்கு ஒட்டுநராக பேரூராட்சித் தலைவர் பயன்படுத்தியுள்ளது ;
(5) பேரூராட்சித் தலைவர் தனது வீட்டிற்கு பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெறாமல் இரண்டு அடுக்கு மாடி வீடு கட்டியுள்ளது ;
(6) மேற்படி வீட்டிற்கு குறைவான வீட்டு வரி விதித்துள்ளது ;

(7) மாநில ஊரமைப்புத் துறையின் அனுமதியில்லாமல் நஞ்சை நிலமாக உள்ள நிலத்தில் தனது கணவரின் பெயரில் வீடு கட்டி வீட்டு வரி ரசீது போட்டுள்ளது ;

(8) உள்ளாட்சி விதிகளுக்கு புறம்பாக பினாமி பெயரில் ஒப்பந்தப் பணிகளை எடுத்து செய்துள்ளது ;

(9) பேரூராட்சி விதிகளின்படி நான்கு கூட்டங்களுக்கு வராத 14–வது வார்டு உறுப்பினரை ஐந்தாவது முறையாக கூட்டத்திற்கு அழைப்பு கொடுத்து கலந்து கொள்ள செய்துள்ளது ;

(10) பேரூராட்சியில் உள்ள குளங்கள் மீன் பிடி ஏலங்களை முறையாக நடத்தாமலும், வணிக வளாகம், நாளங்காடிகள் நீண்ட நாட்களாக குத்தகை புதுப்பிக்கப்படாமல் உள்ளது, இதன் மூலம் பேரூராட்சிக்கு இழப்பீடு ஏற்படுத்தியது ;

(11) சுற்றுப்புறச் சூழல் அனுமதியில்லாமல் ஆடு அடிக்கும் கூடம் கட்டியதில் முறைகேடு ;

(12) பழைய பேரூராட்சிக் கட்டிடம் இடிக்கப்பட்டதில் உள்ள இரும்பு மற்றும் தேக்குமரப் பொருட்கள் அனைத்தும் டெண்டர் விடாமல் பேரூராட்சி மன்றத் தலைவரே எடுத்துச் சென்றது ;

(13) உயர் மின் அழுத்த பாதைக்கு கீழ் வணிக வளாகம் கட்டிடம் கட்டி மின் இணைப்பு பெற முடியாமல் பேரூராட்சிக்கு ரூ.2.10 லட்சம் நிதியிழப்பு ஏற்படுத்தியது ;

17.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரால் ஏற்கனவே 03.11.2004 மற்றும் 18.05.2015 ஆகிய தேதிகளில் பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ஆகியோர்களுக்கு முகவரியிட்டு அளிக்கப்பட்ட புகார் மனுக்கள் மற்றும் தற்போது அளிக்கப்பட்ட புகார் மனு ஆகியவற்றின் நகல்கள் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அம்மனுக்களின் மீது முறையீட்டு மனுதாரர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களிடம் விசாரணை மேற்கொண்டும், தல ஆய்வு மேற்கொண்டும் அதற்கான அறிக்கையினை கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் குறிப்புகளுடன் சமர்ப்பிக்க 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 24.04.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி பொருட்கள் தொடர்பாக 30.11.2018 அன்று முறையீட்டு மனுதாரர் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களிடம் விசாரணை மேற்கொண்டும், தல ஆய்வு செய்தும் தனது குறிப்புகளுடன் விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி விசாரணை அறிக்கையின் மீதான முறையீட்டு மனுதாரரின் விளக்கங்களை பெற விசாரணை அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், இம்முறை மன்ற நடுவத்தில் 31.07.2019 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர், தான் ஏற்கனவே 30.11.2018 அன்றைய விசாரணையில் தெரிவித்த கருத்துக்களையே மீண்டும் தெரிவித்து தனது குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையினை அறிய பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் நிலையில் உள்ள சம நிலை அலுவலர்களை தவிர்த்து வேறு உயர் அதிகாரிகளை கொண்டு தனது புகார்கள் குறித்த பணிகளை ஆய்வு செய்ய கோரியுள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்தால் 08.08.2019 அன்று பெறப்பட்ட ஆவணங்களை பரிசீலித்ததில், இவரால் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல்வேறு அலுவலகங்களிடமிருந்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடிதங்களின் விவரங்களை மேலொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளார். மேலும் மேற்படி முறையீட்டு மனுதாரர் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 30.11.2018 அன்றைய விசாரணையில் தனது புகார்களுக்கான எந்தவிதமான உறுதியான ஆதாரங்களும் அளிக்காததுடன், இம்முறைமன்ற நடுவ 31.07.2019 நாளிட்ட விசாரணையிலும் கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்தினர் மீது ஏற்கனவே குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளையே தெரிவித்துள்ளாரே தவிர அதற்கான எந்தவிதமான ஆதார பூர்வமான ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை.

மேலும், புவனகிரி பேரூராட்சி முன்னாள் தலைவர் திருமதி.வள்ளி சச்சிதானந்தம், மற்றும் துணைத் தலைவர் திரு.என்.ராம்குமார் ஆகியோர் மீது மேற்படி முறையீட்டு மனுதாரரால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு அளிக்கப்பட்ட 01.11.2014 நாளிட்ட புகார் மனுக்கள் தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால்

மற்றும் துணைத் தலைவர் திரு.என்.ராம்குமார் ஆகியோர் மீது முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட புகார்கள் ஆதாரமற்று, நிரூபிக்க முடியாத நிலை உள்ளதால் விசாரணை நடவடிக்கை கைவிடப்பட்டதாக ஊழல் தடுப்பு மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை இயக்குநரக மேற்கு சரக காவல் துறை கண்காணிப்பாளரின் 06.09.2019 நாளிட்ட கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுக்கள், முறையீட்டு மனுக்களின் மீதான கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு மற்றும் விசாரணை அறிக்கை, மேற்படி விசாரணை மற்றும் தல ஆய்வறிக்கை மீதான முறையீட்டு மனுதாரரின் 31.07.2019 நாளிட்ட விளக்கம் முறையீட்டு மனுதாரரால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் அளித்துள்ள மனுவின் மீதான விசாரணை குறித்தான கடித நகல் ஆகியன இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரர், தனது புகார் தொடர்பாக கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விசாரணையில் போதிய ஆதார ஆவணங்கள் அளிக்காத நிலையிலும், மேற்படி விசாரணை அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தால் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதன் மீது நடைபெற்ற 31.07.2019 நாளிட்ட விசாரணையிலும் தனது குற்றச்சாட்டுகளுக்கான உருப்படியான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்காத நிலையிலும், முறையீட்டு மனுதாரரால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் அளித்துள்ள புகார் மனுக்கள் மீது எவ்வித ஆதாரங்களும் இல்லை என நடவடிக்கை கைவிடப்பட்ட நிலையிலும், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு நிரூபிக்கத் தக்க ஆதாரங்கள் இன்றி உள்ளதாலும், கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது அறிக்கை மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் அறிக்கையின் அடிப்படையில் மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவல முத்திரையுடன் இடப்பட்டு ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 20/9

25/9/19

25/9/19

பெறுநர்

1.திரு ஆ. கனகராஜன்,
சமூக ஆர்வலர்,
26–பி கடலூர் மெயின் ரோடு,
புவனகிரி,
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர்–620007

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.